# இயல் 6.11 - சுற்றளவு மற்றும் பரப்பளவு


பயிற்சி எண் :: 6.11.1.1.I

சுற்றளவு - வடிவங்களின் சுற்றளவு - பயிற்சி

## சுற்றளவு - வடிவங்களின் சுற்றளவு - பயிற்சி

கீழ்காணும் கணக்குகளுக்குத் தீர்வு காண்க.

### வினா ①




அறிவழகன் தினமும் காலை நடைப்பயிற்சியின் பாகமாக, 150 மீட்டர் பக்க நீளமுடைய, செம்மையான முக்கோண வடிவில் அமைந்துள்ள தன்னுடைய நிலத்தை 10 முறை வரப்பின்வழி சுற்றிவருவார். எனில் அவர் தினமும் காலையில் நடக்கும் தூரத்தை கிலோ மீட்டரில் கணக்கிட்டுக் கூறுக.

செம்மையான முக்கோணம் என்பது சமபக்க முக்கோணத்தைக் குறிக்கிறது. எனவே, அறிவழகனின் சமபக்க முக்கோண வடிவில் அமைந்துள்ள நிலத்தின் மூன்று பக்கங்களின் அளவு } = 150 மீட்டர்

முக்கோணத்தின் சுற்றளவு காணும் சூத்திரம் } ⇒ $S_1 + S_2 + S_3$ (மூன்று பக்கங்களின் கூட்டுத்தொகை)


சூத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ள மதிப்புக்களை மாற்றீடு செய்கையில். . . } ⇒ சுற்றளவு = 150 + 150 + 150

அறிவழகனின் நிலத்தின் சுற்றளவு } = 450 மீட்டர்

எனில், அவர் நிலத்தை 10 முறை சுற்றிவந்து தினமும் நடக்கும் தூரம் } = 450 × 10 = 4,500 மீட்டர்)

அறிவழகன் தினமும் நடக்கும் தூரம் } = **4.5 கிலோ மீட்டர்**

### வினா ②




குமாரின் பள்ளியில் உள்ள கால்பந்து விளையாட்டு மைதானத்தின் வரைபடம் மேலே கொடுக்கப்பட்டுள்ளது. அவன் தினமும் பள்ளி முடிந்தபின் இந்த மைதானத்தை 5 முறை சுற்றிவிட்டு வீட்டிற்குச்செல்லுவான். கடந்த மாதத்தின் பள்ளி நாட்கள் 25. எனில், அவன் கடந்த மாதம் ஓட்டத்தில் கடந்த தூரம் எவ்வளவு?

கால்பந்து விளையாட்டு மைதானத்தின் சுற்றளவின் ஒவ்வொரு பகுதியின் நீளமும் கொடுக்கப்பட்டுள்ளது. அவை. . . } = 23.4, 36.6, 23.4 மற்றும் 36.6 மீட்டர்

கொடுக்கப்பட்டுள்ள வடிவத்தின் சுற்றளவு காணும் சூத்திரம் } ⇒ $S_1 + S_2 + S_3 + S_4$ (நான்கு பக்கங்களின் கூட்டுத்தொகை)

சூத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ள மதிப்புக்களை மாற்றீடு செய்கையில். . . - சுற்றளவு } = 23.4 + 36.6 + 23.4 + 36.6

கால்பந்து விளையாட்டு மைதானத்தின் சுற்றளவு } = 120 மீட்டர்

எனில், குமார் தினமும் 5 முறை சுற்றிவந்து தினமும் ஓடும் தூரம் } = 120 × 5 = 600 மீட்டர்

எனில், குமார் கடந்த மாதத்தில் ஓடிய தூரம் (பள்ளி நாட்கள் = 25) } = 600 × 25 = 15000 மீட்டர்

குமார் கடந்த மாதத்தில் ஓடிய மொத்த தூரம் } = **15 கிலோ மீட்டர்**


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Monday 21st March, 2022 :: 12:21 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.

https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**